<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 91/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | கௌசிக் ராஜ் | நாள் | 14.06.2023 |
| தகப்பனார் பெயர் | சந்திர சேகர் | | |

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>**

24) தற்போது என்னிடம் காட்டப்படும் கிரய ஆவணத்தின் பதிவு நகல் தான் ச.எண்.284/2B தொடர்பாக திருமக்கவுண்டர் மகன் கோவிந்தசாமியால், சின்னப்ப கவுண்டர் மகன் கிருஷ்ணனுக்கு 23.03.1992ம் தேதியில் விற்பனை செய்ததற்கான ஆவணம் என்றால், சரிதான். மேற்படி கிரய ஆவணத்தின் பதிவு நகல் பிரதிவாதி தரப்பில் **பி.வா.சா.ஆ.1 (Ex.B1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

25) மேற்படி ஆவணத்தின் சொத்து விவரத்தில் தென்வடலாக செல்லும் 10 அடி அகல பொது வழி பாகநிலத்திற்கும் கிழக்கு என கண்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி திருமக்கவுண்டர் மகன் கோவிந்தசாமி ச.எண்.284/2Bல் அவருக்கு பாத்தியப்பட்ட வேறு சில நிலங்களையும் பிளாட் போட்டு வெவ்வேறு நபர்களுக்கு விற்பனை செய்துள்ளார் என்றால், சரிதான்.

26) தற்போது என்னிடம் காட்டப்படும் கிரய பத்திரத்தின் பதிவு நகலில் (பதிவு எண்.831/1999) மேற்படி திருமக்கவுண்டர் மகன் கோவிந்தசாமியால் சுப்ரமணிய முதலியார் மகன் பால சுந்தரம் என்பவருக்கு ச.எண்.284/2Bல் உள்ள ஒரு பகுதி நிலத்தை 19.05.1999ம் தேதியில் விற்பனை செய்துள்ளதாக உள்ளது என்றாலும், அதன் சொத்து விவரத்தில் கிருஷ்ணராஜ் கவுண்டர் நிலத்திற்கும் வடக்கு என்றும், மாணிக்க கவுண்டர் நிலத்திற்கும் கிழபுறம் உள்ள 10 அடி அகலமுள்ள தென்வடல் பொது பாதைக்கும் கிழக்கு என கண்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி கிரய ஆவணத்தின் பதிவு நகல் பிரதிவாதி தரப்பில் **பி.வா.சா.ஆ.2 (Ex.B2)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

27) தற்போது என்னிடம் காட்டப்படும் கிரய ஆவணத்தின் பதிவு நகலின் படி ச.எண்.284/2Bல் உள்ள ஒரு பகுதி நிலத்தை பெருமாள் கவுண்டர் மற்றும் அவரது

மகன்கள் சண்முகம் மற்றும் ரங்கராஜன் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி சரவணனுக்கு 16.10.2003ம் தேதியில் தாவா 1–வது அயிட்ட சொத்தை விற்பனை செய்துள்ளார் என்றால், சரிதான். மேற்படி ஆவணத்தின் சொத்து விவரத்திலும் ராஜீ கவுண்டர் நிலத்திற்கும் வடக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி கிரய ஆவணத்தின் பதிவு நகல் பிரதிவாதி தரப்பில் **பி.வா.சா.ஆ.3 (Ex.B3)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

28) தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவண எண்.1116/1995ன் பதிவு நகலில் கோவிந்தசாமியிடமிருந்து கிரயம் பெற்ற நிலத்தை கிருஷ்ணன் என்பவர், புஷ்பா என்பவருக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால், சரிதான். மேற்படி ஆவணத்திலும் ராஜி கவுண்டர் நிலத்திற்கும் வடக்கு என்றும், கிழபுறம் உள்ள 10 அடி தென்வடல் பொது வழித்தடத்திற்கும் கிழக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி கிரய ஆவணத்தின் பதிவு நகல் பிரதிவாதி தரப்பில் **பி.வா.சா.ஆ.4 (Ex.B4)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

29) ச.எண்.284/2Bல் உள்ள நிலங்கள் அனைத்தும் மேற்படி கோவிந்தசாமிக்கு பாத்தியப்பட்டது என்றால், அதில் கோவிந்தசாமிக்கும் நிலம் உள்ளது. வேறு நபர்களுக்கும் நிலம் உள்ளது. ஆனால் மேற்படி பரிவர்த்தனைகளில் கண்ட நிலங்கள் அனைத்தும் கோவிந்தசாமிக்கு பாத்தியப்பட்டவைதான்.

30) தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவண எண்.2108/2003 ன் பதிவு நகலின் படி மேற்படி கோவிந்தசாமியிடமிருந்து கிரயம் பெற்ற பாலசுந்தரம் என்பவரது மனைவி சகுந்தலா மற்றும் அவரது வாரிசுகள் அவர்களது நிலத்தை 1ம் பிரதிவாதி சரவணனுக்கு 27.11.2003ம் தேதியில் விற்பனை செய்துள்ளனர் என்றாலும், மேற்படி ஆவணத்திலும் கிருஷ்ணராஜ் கவுண்டர் நிலத்திற்கும் வடக்கு என்றும் மற்றும் கிழபுறம் உள்ள 10 அடி தென்வடல் பொது வழித்தடத்திற்கும் கிழக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி கிரய ஆவணத்தின் பதிவு நகல் பிரதிவாதி தரப்பில் **பி.வா.சா.ஆ.5 (Ex.B5)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

31) மேற்படி பத்திரங்களில் கண்டுள்ள ராஜி கவுண்டர் என்பவரும் கிருஷ்ணராஜ் கவுண்டர் என்பவரும் ஒரே நபர்தான் என்றால், சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.3 மற்றும் பி.வா.சா.ஆ.5 ஆகிய ஆவணங்களின் படி அதில் கண்டுள்ள சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு சுய சம்பாத்திய சொத்துக்கள் என்றால், சரிதான்.

32) 1ம் பிரதிவாதிக்கும், என் தகப்பனார் சந்திரசேகர், என் பாட்டனார் கிருஷ்ணராஜ் (எ) ராஜி கவுண்டர், என் பாட்டி ரஞ்சிதம், என் அத்தைகள் வசந்த குமாரி, தமயந்தி ஆகியோர்களுக்கிடையே 20.02.2006ம் தேதிய பாகபிரிவினை செய்யப்பட்டுவிட்டது என்றால், சரிதான்.

(1ம் பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.